## <u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி</u>

## <u>O.S.No. 150/2024</u>

20.02.2026 பி.வா.சா.2 திரு. முருகன்

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு தகவல் சொல்லி சாட்சியம் அளிக்க யார் என்னை அழைத்து வந்தது என்றால் நானாக தான் வந்தேன். இந்த வழக்கில் யார் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் அதற்கு பிரதிவாதிகள் தரப்பில் என்ன பதில் தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நிருபண வாக்குமூலத்திற்கு தகவல் சொன்னது நானா, கணேசனா என்றால் நான் தான் வழக்கறிஞரிடம் சொன்னேன். இந்த வழக்கு சம்பந்தமாக வழக்கறிஞர் அலுவலகத்திற்கு கணேசன் தான் என்னை அழைத்து சென்றார் என்றால் நானாக தான் சென்றேன்.
2. இந்த வழக்கில் 1–ம் பிரதிவாதி விசாரணை செய்யப்பட்டுள்ளார் அது பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனக்கும் கணேசனுக்கும் எத்தனை ஆண்டுகால பழக்கம் உள்ளது என்றால் பிறந்ததில் இருந்தே தெரியும். கணேசனுக்கும் என்னை நன்றாக தெரியும் என்றால் நான் ஆட்டோ ஒட்டுவதால் நன்றாக தெரியும். நான் நிருபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள முகவரியில் குடியிருந்து வரவில்லை என்றும் பேட்டை கிராமம், ஞானம்மாள் கட்டளையில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான் நான் பலசர கடை ஞானம்மாள் கட்டளையில் வைத்துள்ளேன். எனது அப்பா அம்மா எனது பூர்விக வீட்டில் உள்ளார்கள்.
3. நான் நிருபண வாக்குமூலத்தில் தெரிவித்த முகவரியில் குடியிருந்து வராத காரணத்தால் அதன் அடிப்படையில் உயிலில் பொய்யான முகவரியை

குறிப்பிட்டு சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன் என்பதால் எனது சாட்சியம் ஏற்றுக் கொள்ளக் கூடியதில்லை என்றால் சரியல்ல. தங்கம்மாளுக்கு உயில் பத்திரம் எழுதியதாக சொல்லப்படும் காலகட்டத்தில் அவருக்கு 86 வயது என்று சொன்னால் இருக்கலாம். கணேசன் என்பவருடன் உடன் பிறந்த நபர்கள் எத்தனை பேர் என்று தெரியுமா என்றால் 3 ஆண் மற்றும் 4 பெண்கள்.

4. எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் 7 வகுப்பு வரை படித்துள்ளேன். எழுத்து கூட்டி தான் படிப்பேன். நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் என்ன உள்ளது என்று தெரியுமா என்றால் தெரியும். உயில் பத்திரத்தில் என்ன எழுதப்பட்டிருந்தது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். உயில் பத்திரத்தில் கணேசன் உடன் பிறந்தவர்களுக்கு என்ன காரணத்திற்காக சொத்து வழங்கப்படவில்லை என்ற விவரம் சொல்லப்படவில்லை என்றால் அது பற்றி தெரியாது.

5. தங்கம்மாள் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துகளை கணேசனும், அவர் உடன்பிறந்தவர்களும் பயிர் செய்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. உயில் பத்திரத்தில் என்ன என்ன சொத்துகள் சொல்லப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் சரியாக ஞாபகம் இல்லை. உயில் பத்திரம் எழுதுவது சம்பந்தமாக கணேசன் எத்தனை நாளுக்கு முன்பு எனக்கு தெரிவித்தார் என்றால் உயில் எழுதியது தங்கம்மாள் பாட்டி உயில் எழுதுவதற்கு முன்பு நான் 26.10.2016 தேதி பாட்டி ஆட்டோ கூப்பிட்டு போய் எழுத்தர் பாவு கணேசை சந்தித்தார்.

6. நிருபண வாக்குமூலத்தை எந்த தேதியில் தாக்கல் செய்தேன் என்றால் 4 நாட்களுக்கு முன்பு தாக்கல் செய்தேன். நிருபண வாக்குமூலத்தில் தாக்கல் செய்த பின்பு அடுத்த வாய்தா எந்த தேதியில் வந்தேன் என்றால் இன்றில் இருந்து 2 நாட்களுக்கு முன்பாக. என்ன கிழமையில் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்தேன் என்றால் ஞாபகம் இல்லை. எனக்கு நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்த தேதி ஞாபகம் இல்லாமல் உயில்

பதிவு செய்த தேதியை ஞாபகம் வைத்து உயில் பதிவு செய்த சம்பவத்தை தெரிவித்திருப்பது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

7. நிருபண வாக்குமூலத்தில் உயில் பத்திரம் எழுதியதாக சொல்லப்படும் காலத்தில் கணேசன் உடன் இருந்ததாக எந்த விவரமும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். உயில் பத்திரம் தயார் செய்த காலம் முதல் பத்திரம் பதிவு செய்த காலம் வரை கணேசன் உடன் இருந்து தான் உயில் பத்திரம் பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. தங்கம்மாள் அவருக்கு படிப்பறிவு இல்லை கைரேகை வைப்பார் என்றால் சரிதான்.
8. உயில் பத்திரத்தில் 1வது சாட்சியாக கையொப்பம் செய்துள்ளது கணேசன் அவர்களின் மனைவி மயிலம்மாள் என்றால் சரிதான். தங்கம்மாள் நடமாட முடியாத காரணத்தால் தான் எனது ஆட்டோவில் வந்தார் என்று சொன்னால் அவர் கீழே விழுந்ததால் ஒரு கால் நடக்க முடியாது. நான் தொழில் செய்வதாக சொன்னது எந்த இடம் என்றால் ஞானம்மாள் கட்டளை.
9. உயில் பத்திரவு செய்த காலத்தில் எனது அன்றாட வாழ்வில் காலையில் எத்தனை மணிக்கு சென்று எத்தனை மணிக்கு வருவேன் என்றால் காலையில் 4 மணிக்கு சென்று விட்டு 9 மணிக்கு வருவேன் மீண்டும் போவேன். எனது நிருபண வாக்குமூலத்தில் கணேசன் அவர்கள் தான் தங்கம்மாளை கவனித்து வந்ததாக கணேசனுக்கு ஆதரவாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கணேசன் அவர்கள் தங்கம்மாள் அவர்களின் இயலாமையை பயன்படுத்தி அவரை ஏமாற்றி தங்கம்மாளுக்கு என்ன செய்கிறோம் என்பதை தெரியாமலே உயில் பத்திரத்தை பிறப்பித்துள்ளார் என்றும் நான் கணேசன் என்பவரின் தவறான செயலுக்கு ஒத்துழைத்துள்ளேன் என்றால் சரியல்ல.
10. தங்கம்மாள் அவர்களுக்கு உயில் சொத்துகளை பொறுத்து அனைவருக்கும் பிரித்து கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான்

இருந்து வந்தார் அவரை ஏமாற்றி உயில் பத்திரம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தங்கம்மாள் அவர்கள் உயில் ஆவணம் எழுதும் போது நல்ல உடல் நிலை மற்றும் மனநிலையில் இருந்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தங்கம்மாள் உயில் பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ள விவரம் அறிந்து எழுதிக் கொடுக்கப்பட்டதாக சொல்வது பொய்யானது என்றால் சரியல்ல.

11. தங்கம்மாள் அவருக்கு படிப்பறிவு கிடையாது என்றும் அவர் பத்திர பதிவிற்கு தொகை செலுத்தியதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. பத்திர எழுத்தர் பாபு கணேஷ் எந்த முகவரியில் வசித்து வருகிறார் என்றால் திருநெல்வேலி டவுண் சந்தி பிள்ளையார் கோவில் அருகில் அலுவலகம், வீடு சிவா தெருவில் உள்ளது. பாபு கணேஷ் அலுவலகம் இருந்ததாக சொல்லும் இடத்திற்கு தங்கம்மாள் எப்படி வந்தார் என்று தெரியுமா என்றால் ஆட்டோவில் கூட்டி வந்தேன்.

12. பிரதிவாதிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

MARIMUTHU R MUNIYASAMY
Deposition uploaded on 20.02.2026
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2026.02.20 17:45:00 +0530

Principal District Munsif,
Tirunelveli.